[இடைவேளைக்குப் பின்னர் சட்டப் பேரவை மாலை 3-30 மணிக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமையில் மீண்டும் கூடியது.]

4. ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

(அ) அறிமுகம் செய்யப்படும் மசோதாக்களின் நகலை முன்னதாக உறுப்பினர்களுக்கு வழங்குதல்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று மாலை இந்தக் கூட்டத் தொடக்கத்தில் திரு. அழகர்சாமி அவர்கள் அவர்களுடைய நடைமுறைக் கேள்வியை எடுத்து விளக்குவார்கள்.

***திரு. சோ. அழகர்சாமி:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார், மசோதாவை அறிமுகம் செய்து வைப்பதற்கு ஒரு நாளைக்கு முன்னாலாவது எங்கள் கைக்குக் கொடுக்க வேண்டும். இதுதான் மக்கள் சபையில் அனுஷ்டிக்கப்படுகிறது. அஜெண்டா இரவு வெகு நேரத்திற்குப் பிறகு தான் எங்கள் கைக்குக் கிடைக்கிறது. இரண்டு தினங்களுக்கு முன்னால் கிடைக்க வேண்டும். இதைப் பற்றித் தலைவர் அவர்களுடைய தீர்ப்பை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒரு நடைமுறைக் கேள்வியை எழுப்ப அனுமதி கொடுக்கிறேன்.

(இ) விற்பனை வரி (திருத்த) மசோதா ஆய்வை ஒத்திவைத்தல்

Thiru K. RAMAMOORTHY : On a point of order, Sir. By virtue of the notifications issued under section 59 (1) of the Madras General Sales Tax Act, 1959, the provisions of this amending Bill have already come into operation. As such there is no urgency for introducing this Bill at this stage.

ஆகவே இந்த அமென்ட்மெண்ட் ஆக்ட் பற்றிய விவாதத்தையும், நிறைவேற்றும் பொறுப்பையும் சட்டசபையில் தொடர்ச்சியாக வருகின்ற மற்ற நாட்களில் வைத்துக் கொள்ளலாம். இதை இவ்வளவு அவசரமாக வைத்துக் கொள்ளத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது திரு. மார்ட்டின் அவர்கள் ஒரு கேள்வியை எழுப்ப அனுமதிக்கிறேன்.

(உ) வரவு-செலவுத் திட்ட விவாதத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நாட்களில் நிதி மசோதாக்களை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுதல்.

* THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, the budget has been introduced in this Hon. House and it indicates certain increase in the rate of sales tax. Under Rule 153 of the Assembly Rules, the Hon. Speaker has fixed the dates for the general discussion on the budget and he has fixed Tuesday, the 27th June 1967 as the last date for the general discussion. The general discussion is not yet over, the House is still carrying on the general discussion. Demands for grants have to come thereafter. In the Parliament also, the Finance Bill comes only after the conclusion of the voting on

demands for grants. That being so, the moving of this amending Bill now during the time allotted by the Hon. Speaker for the general discussion on the Budget will result in contempt of this Hon. House.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் திரு. அழகர்சாமி அவர்களுடைய நடைமுறைக்கேள்வி மீது நான் எனது கருத்தைத் தெரிவிக்கிறேன்.

அவர்கள் விதிமுறைகளைக் கற்று அறிந்து சிறப்பாக நடைமுறைக் கேள்வி எழுப்பியதற்காக பாராட்டுகிறேன். சட்டப் பேரவை விதிகளில் 95-வது விதியில் குறிப்பிட்டிருப்பதில் கடைசி இரண்டு வரியைப் படித்துப் பார்க்கவேண்டும். அதிலே—

" . . . . and such objection shall prevail unless the Speaker allows the motion to be made "

95-வது விதியில் பேரவைத் தலைவர் அனுமதித்தாலொழிய இரண்டு நாட்களுக்கு முன்னால் கொடுக்க வேண்டுமென்றிருக்கிறது. இந்த விதியிலே கொடுக்கப்பட்டிருக்கிற கால அளவைக் குறைக்கலாம் என்பது தான் " ஒழிய ", தவிர' என்ற சொல்லில் இருந்து தெரிய வருகிறது. 138-வது விதியில் இதைப்பற்றி இன்னும் தெளிவாகவே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

Rule 138 says :

" The Speaker may, in his discretion, dispense with the provisions of this Chapter regarding notice, periods of notice, or interval between any two stages of legislation, and may, in his discretion, allow any motion regarding a Bill or any amedment to be moved without notice or after such shorter interval, as he may think fit."

இதில், பேரவைத் தலைவரின் விருப்பப்படி முன் அறிவிக்கைக்கான நாட்களைக் குறைக்கலாம் அல்லது முன் அறிவிக்கை கொடுக்காமல் இருக்கலாம் என்று இருந்தாலும், தகுந்த காரணங்களுக்காகவே குறைக்கப்பட வேண்டும் என்பது என் கருத்து. இந்த மசோதா மேன்மைமிகு ஆளுனர் அவர்களின் இசைவை 21—6—1967-ல் பெற்றிருக்கிறது. மசோதா மேலவையிலும் இந்த மாத முடிவிற்குள் நிறைவேற்றியாக வேண்டுமென்று இருக்கிறது. எனவே அரசினருக்கு மிகக்குறைந்த கால அளவுக்குத்தான் நேரவசதி கிடைத்திருக்கிறது. இதன் காரணமாக 138-வது விதிப்படி முன் அறிவிக்கைக்கான கால அளவுவை குறைத்துக் கொள்ள என் ஒப்புதலை அளித்து நான் கையெழுத்து இட்டிருக்கிறேன். மேலும் உறுப்பினர்கள் குறிப்பாக எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் திருத்தத் தீர்மானங்களைக் கடைசி நிமிடம் வரையில் கொடுக்க அனுமதியளித்தும் நான் கட்டளையிட்டிருக்கிறேன். எனவே இந்த நடைமுறைக் கேள்வியை நான் ஏற்றுக் கொள்ள முடியாமல் இருப்பது குறித்து வருந்துகிறேன்.

1967 ஜூன் 24] [பேரவைத் தலைவர்]

அடுத்தாற்போல், திரு. ராமமூர்த்தி அவர்கள் ஏறத்தாழ இதையே குறிப்பிட்டமாதிரித் தெரிகிறது. அவர்கள் இதை உடனடியாக நிறைவேற்றத் தேவை இல்லையென்று ஒரு பிரிவை மட்டும் எடுத்துக் குறிப்பிட்டார்கள். அந்த ஒரு பிரிவு எப்படியிருந்தாலும் அரசினரின் அலுவல்கள் ஒழுங்காக முறையோடு நடைபெறுவதற்காகவும், வரி வசூல், முதல் தேதியில். இருந்து நடைபெறுவதற்காகவும், இந்த மசோதாவானது இந்த அவையிலும் மேலவையிலும் இந்த மாதத்திற்குள் நிறைவேற்றப் பட்டுவிடவேண்டுமென்ற கட்டாயமான நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இவ்வுறுப்பினர் எழுப்பிய நடைமுறைக் கேள்வியையும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அடுத்தாற்போல், திரு. மார்டின் அவர்கள் ஏதோ நாடாளுமன்றத்தில் நடந்த சில விவகாரங்களைக் குறித்து, அந்த நடைமுறையை நாமும் பின்பற்றவேண்டுமென்று குறிப்பிட்டார்கள்.

* THIRU T. MARTIN : Sir, I gave only an illustration from the proceedings of the Parliament but I relied upon Rule 153 of the Assembly Rules which says—

'The Budget shall be dealt with by the Assembly in two stages, namely :

(i) a general discussion; and

(ii) the voting of demands for grants.'

The Hon. Speaker has fixed seven days for the general discussion and he has exercised his power under sub-rule (2) of Rule 153 which says—

'The Speaker shall, in consultation with the Leader of the House and the Business Advisory Committee, if any, fix and appoint sufficient number of days for each of these stages.'

Now the point is that the Hon. Speaker has fixed seven days for the general discussion and before that, if this Bill which virtually gives effect to the Budget proposals is passed, then it will be like putting the Budget to the vote. According to sub-rule (1) of Rule 154, no motion shall be moved at this stage, nor shall the Budget be submitted to the vote of the Assembly. So, my submission is that the moving of the Bill will have the effect of putting the Budget to the vote of this House.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் அலுவல் ஆய்வுக் குழுவின் தீர்ப்புபற்றிக் குறிப்பிட்டார்கள். அந்தத் தீர்ப்பை எடுத்து வாசித்துவிட்டால் அவர்கள் குறிப்பிட்ட இந்தக்கேள்வியை எழுப்பியிருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். பொது விவாதத்திற்காக வழக்கமாக நம் பேரவை கூடுகிற நேரங்களை எல்லாம் ஒதுக்கிவிட்டு, அலுவல் ஆய்வுக் குழுவின் தீர்மானத்தின் கடைசிப்பகுதியாக '24—6—1967-ஆம் தேதி பிற்பகலில், அரசினர் மசோதாக்கள் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும்' என்பது அலுவல்

ஆய்வுக் குழுவின் தீர்மானம். எல்லோருக்கும் தீர்மானத்தின் சுவடிகள் கிடைத்திருக்கும். திரு. மார்டின் அவர்களும் கடைசிப் பகுதியைப் படித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பார்லிமெண்டில் இருக்கிற நடைமுறையைப் பற்றிச் சொல்லி அதை இங்கே பேரவைத் தலைவர் பின்பற்றவேண்டுமென்று கூறியதற்கு, நான் இங்கு பலமுறை விளக்கம் கூறியிருக்கிறேன். அரசமைப்புச் சட்டப்படி 194-வது பிரிவை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே அன்று எடுத்துரைத்தார்கள். அதன்படி நமது பேரவையின் 250 விதிகளையும் பின்பற்ற வேண்டும்; அவைகளில் குறிப்பிடாத காரியங்களுக்கு இங்கிலாந்தில் இன்ன பாராளுமன்ற விதிகளையே கடைப்பிடிக்க வேண்டுமென்று அரசமைப்புச் சட்டத்தின் 194-வது பிரிவை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே சொன்னார்கள். நானும் பலமுறை சொல்லியிருக்கிறேன். இந்தப் பேரவையின் தலைவராக என்னை நியமித்தபோதே அரசமைப்புச் சட்டத்தைக் கடைப்பிடிப்பதாக என்னிடம் பிரமாணம், வாக்குறுதி, வாங்கிக் கொண்டு, பிறகு நாடாளுமன்றத்தில் ஏதோ, நடக்கிறது. அதைப் பின்பற்றவேண்டுமென்றும் அதை முன் மாதிரியாக வைத்துக் கொள்ளவேண்டுமென்றும் சொன்னால், அது, பிரமாணத்துக்கு முரணாக இருக்கிறது என்று கூறி, தள்ளுபடி செய்யக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அடுத்த அலுவல், மசோதாக்கள்.

* THIRU K. VINAYAKAM : Sir, on a point of information . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்பர்மேஷன் என்று நடைமுறை ஒன்றும் கிடையாது. நடைமுறைக் கேள்வி இருந்தால் சொல்லுங்கள்.

THIRU K. VINAYAKAM : But I do not want to be in disorder.

Mr. Speaker, Sir, we understand that the rulings given by the Chair are binding upon this House and the Hon. Speaker was magnanimous to say that he was using the discretionary powers. So far as this rule is concerned, may I know and the House also wants to know, what are the extenuating circumstances or compelling reasons to persuade the Hon. Speaker to use his discretionary powers. After all, the general discussion on the Budget is going to be over on the 27th instant and on the 28th instant the sales tax demand is going to come up for discussion. There are enough days, that is 28th, 29th and 30th instant for this Bill to be passed here in this Lower House as well as in the Upper House. Even if the Upper House rejects it, it automatically becomes law by the first of July. Such being the case, what are the extenuating circumstances under which the Hon. Speaker will have to suspend this rule under operation.

*** THE HON. THIRU C. N. ANNADURAI :** Mr. Speaker, Sir, the only aspect to be taken into consideration is the question of time-table. There is no other extenuating circumstances in that.

As my hon. friend has stated that even if such Bills are not taken into consideration or are rejected or sent back, the Government have got enough time for that. But since we have to take up Demands continuously, we thought that we would have an evening session when these Bills could be discussed. (Thiru K. Vinayakam : The Hon. the Leader of the House himself is silent.) He is keeping a very serene silence because he has been a member of the party to that arrangement and therefore, he is keeping quiet. But that does not mean that the hon. Member should not question all these things. But what is really amazing to me is that the hon. Member is so vigorous in fighting over a shadow.

திரு. க. இராமமூர்த்தி : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார் இந்த 1967-ம் வருஷத்து ஜெனரல் ஸேல்ஸ் டாக்ஸ் திருத்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலும் நோட்டிஃபிகேஷன் ஆன அன்றே அமலுக்கு வந்துவிட்டது. அந்தச் சட்டம் மந்தின தேதியிலிருந்தே அமலுக்கு வந்துவிட்டது. இந்த நிலையிலே இப்படி அவசரமாகச் சட்ட மன்றத்தைக் கூட்டி இந்தச் சட்டத்தைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. ப. அழகமுத்து எழுந்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே நடைமுறைக் கேள்வி எழுப்பியவர்களையும் அமைச்சர்களையும் தவிர வேறு உறுப்பினர்கள் பேசுவதற்கு இடமில்லை.

On the matter mentioned by the hon. Member Thiru K. Vinayakam that there is sufficient time, the point is whether these bills in fact have retrospective effect or not is not a fully settled question of law. The hon. Member assumes that whatever we pass in this Assembly is automatically passed by the Upper House and returned in two days. Our experience is that Bills passed by this House have been held up by the other House to the maximum extent possible. The other House has power to obstruct non-money Bills to the extent of ninety days. They have not returnd the Madras District Municipalities (Amendment) Bill 1967, although two months and twenty-nine days have elapsed They are waiting for the full three months, not even one day less They have held it up for full three months. They have got power to hold up even Money Bills for fourteen days. I am unable to assume that the Upper House will pass even Money Bills within that period. I will only assume that the maximum length of time should be given to the other House. They may probably want to discuss in detail and the maximum time should be given.

(எ) மேலவையைப்பற்றிக் குறை கூறல்.

THIRU R. PONNAPPA NADAR : On a point of order, Sir, accusing the Upper House of obstruction will amount to a breach of order. When the Upper House is seized of a matter, when